IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO.147-2010**

Deposition PW 1 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 02.06.2025 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.சாந்தப்பா | Father's Name : | திரு.லேட்.முனியப்பா |
| Village : | | Taluk : | |
| -- | | Calling : | |
| -- | | Age : | |
| பி.வா.சா. : | 1 | | |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

**4.** திரு.ஆவலமுனியப்பா, திரு.கிருஷ்ணப்பா, திரு.பைரப்பன், திரு.சொன்னன், திரு.சொன்னன்னன் ஆகியோருக்குள் 1914ம் ஆண்டில் ஆவண எண்.664/1914 என பாகப்பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியும். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் சர்வே எண்.50-ல் உள்ள 6 ஏக்கர் 9 சென்டை மேச்சொன்ன 5 நபர்களுக்கும் பாத்தியப்பட்ட பொது சொத்தாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்சொன்ன சர்வே எண்.50-ல் உள்ள மொத்த் சொத்தும் பொது சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும், அந்த விவரம் என்கு நன்கு தெரியும் என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.50 என்பது 50/1 ஏ, 50/1 பி, 50/1 சி மற்றும் 50/2 ஏ முதல் 50/2 எச் வரை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 50/1 பியில் உள்ள 0.62.5 ெ ஹக்டேர்ஸ் இடம் என்கு பாத்தியப்பட்டது என நான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5. சர்வே எண்.50/1 பியில் உள்ள சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தையின் தகப்பனார் திரு.சின்னசொர்னப்பா என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. வழக்கு சொத்து எனது தாத்தா சின்ன சொர்னப்பா என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்தற்க

ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ஓசூர்-கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை என்.எச்.7- யிலிருந்து பாகலூர் - பேரிகை மாநில தேசி நெடுஞ்சாலைக்கு செல்வதற்கு வழக்கு சொத்து வழியாக வண்டிப்பாதை இருந்தது என்றால் சரியல்ல. ஓசூர்-கிருஷ்ணகிரி என்.எச்7 நெடுஞ்சாலையிருந்து திம்மசந்திரம், புனுகன்தொட்டி, சின்னகொல்லு, பூதிநத்தம், சின்னமுத்தாலி, பெரிய முத்தாலி, பலவனப்பள்ளி ஆகிய கிராமங்களின் வழியாக மேற்சொன்ன வண்டிப்பாதை (ஓணி) சென்று பாகலூர் --பேரிகை நெடுஞ்சாலை அடைகிறது என்றால் சரியல்ல. மேற்சொன்ன வண்டிப்பாதை (ஓணி) சர்வே எண்.46,47,48 வழக்கு சொத்தான 50 மற்றும் 53,54,56,57 மற்றும் 423 ஆகியவைகளில் உள்ளதாக வருவாய் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. சர்வே எண்.50-1 பியில் உள்ள 62.5 ெ ஹக்டர்ஸ் நடுவே மேற்சொன்ன ஓணி செல்கிறது என்றாலும், ஓணியின் வடக்கு பக்கம் 25 செண்ட் 1ம் பிரதிவாதியின் தந்தை தனதுமுனியப்பா என்பவருக்கு பாத்தியப்பட்டு அவருடைய சுவாதீனத்தில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. மேற்சொன்ன தனதுமுனியப்பா என்பவரின் திரு.திம்மராயப்பா என்றாலும், அவருடைய தந்தை பெயர் திரு.ஆவலுமுனியப்பா என்றாலும் சரிதான். ஒணிக்கு வடக்கு பக்கம் உள்ள 25 செண்ட் நிலம் ஆதியில் 1914ம் ஆண்டில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்சொன்ன ஆவலுமுனியப்பா எனபவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன பாகப்பத்திரத்தில் ஆவலுமுனியப்பாவிற்கு வழக்கு சொத்தான 50/1 பியில் உள்ள 62.5 ெ ஹக்டேர்சில் வடக்கு பக்கம் 25 செண்ட் ஒதுக்கப்பட்டதால் தான் மற்ற சர்வே எண்களான 50/1 ஏ, 50/1 சி மற்றும் 50/2 ஏ முதல் 50/2 எச் ஆகியவற்றில் ஆவலுமுனியப்பாவிற்கு எந்த சொத்தும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஓணிக்கு தெற்கு பக்கத்தில் உள்ள 52.5 ஏர்ஸ் நிலம் எனது தந்தை திரு.சின்னசொர்னப்பா பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு தான் எனது தந்தை பெயரில் 52 ஏர்சிக்கு பட்டா உள்ளது அதற்கு முன்பு மொத்த சொத்தான 62.5 ஏர்ஸ்க்கும் எனது தந்தை பெயரில் பட்டா இருந்தது.

7. 62.5 ஏர்ஸ்க்கும் யு,டி.ஆர்ன் போது எனது தாத்தா பெயரில் தவறாக பட்டா வழங்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. யு.டி.ஆர்ன்போது எனது தாத்தா பெயரில் வழங்ககப்பட்ட பட்டாவை ரத்து செய்து 25 சென்டிற்கு தனது பெயரில் பட்டா வழங்கக்கோரி 1ம் பிரதிவாதி 2004ம் ஆண்டில் ஓசூர் வட்டாட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் சரியல்ல அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எந்த அறிவிப்பும் வழங்கவில்லை. 1ம் பிரதிவாதி வழங்கிய மனுவின் பேரில் வட்டாட்சியர் கடந்த 26.03.2014 தேதியில் உத்தரவு பிறப்பித்தார் என்றால் அததைப்பற்றி எனக்கு தெரியாது எனக்கு எந்த அறிவிப்பும் வழங்கவில்லை. வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவில் சர்வே எண்.50/1 பியில் உள்ள 62.5 ஏர்ஸ்ஸை உட்பிரிவு செய்து 50/1 பி1-ல் உள்ள 10 ஏர்ஸ் 1ம் பிரதிவாதி கிருஷ்ணப்பா பெயரிலும்,

50/1பி2வில் 52.5 ஏர்ஸ் நிலத்தை எனது தந்தை சின்னசொர்னப்பா மகன் எனது தந்தை 1ம் வாதி முனியப்பா பெயரில் பட்டா வழங்க உத்தரவு பிறப்பித்தார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 2004ம் ஆண்டு வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தங்களின் எதிர்வழக்குரையில் மேற்சொன்ன விவரங்களை சொல்லியுள்ளார்கள் என்றாலும், நான் தற்போது பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பபிரதிவாதிகள் தங்களின் எதிர்வழக்குரையில் வட்டாட்சியர் உத்தரவைப்பற்றி தெரிவித்துள்ளபோதும், நான் அந்த உத்த்ரவிற்கு எதிராக இன்று வரை எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த உத்தரைப்பற்றி எனக்கு நான் மேல் முறையீடு தாக்கல் செய்யவில்லை.

8. 1ம் பிரதிவாதி கொடுத்த மனுவின் அடிப்படையில் வருவாய் அதிகாரிகள் வழக்கு சொத்தை பார்வையிட்டு முறையாக விசாரணை செய்து வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றாலும் தற்போது நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 10ஏர்ஸ்சிற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்ககப்பட்டபிறகு அதில் 3234 சதுர அடியை பொது தார் சாலை அமைப்பதற்காக 1ம் பிரவிவாதி மோரனப்பள்ளி கிராம பஞ்சாயத்து தலைவர் பெயருக்கு தானம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது சம்பந்தமமாக ஆட்சேபனை செய்துள்ளேன். நான் ஆட்சேகனை மனு கொடுத்தபிறகு துணை மாவட்ட ஆட்சியாளர் வழக்கு சொத்தை பார்வையிட்டு வழக்கு சொத்து 1ம் பிரிதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பைதை உறுதிசெய்து அவர்கள் பெயருக்கு பட்டா வழங்கிட ந.க.எண்.15392/2005 தேதி.28.11.2005-ல் உட்பிரிவு 50/1பி1பி என பட்டா எண்.,2854 பட்டா வழங்ககப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிதானமாக கொடுத்த சொத்து போக மீதமுள்ள 6.5 ஏர்ஸ்சிக்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா 2853 ஆக பட்டா வழங்ககப்பட்டது என்றால் சரியல்ல.

9. 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்ட இடத்தை இன்று வரை அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றாலும், அந்த சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு 52.5 ஏர்ஸ்சில் மட்டுமே உரிமை உள்ளது என்றாலும், மீதமுள்ள 10 ஏர்ஸ்சில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1914ம் ஆண்டில் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் 1ம் பிரதிவாதியின் தாத்தா ஆவலுமுனியப்பா என்பவருக்கு பொது சொத்து என்ற அடிப்படையில் 10 ஏர்ஸ் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றாலும், அந்த சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**1**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.**

**3, 4** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது**.**

(ஒம்/-ஆர்.நரசிம்மமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றைவியல்
நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்.